DMJ CUM JM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **STC No. 79/2023, Mangalamedu P.S. PW -5.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அன்பழகன் | Caste | : | - |
| Father/ Husband Name | : | வீரமுத்து | Calling | : | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Village | : | மங்களமேடு காவல் நிலையம் | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 48/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.02.2025. | | | | | |

A1,A2,A3,A5,A6 Present. A4 absent u/s 317 CrPC filed and allowed.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் தற்போது மங்களமேடு காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 29.01.2023 ஆம் தேதி மங்களமேடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, லப்பைக்குடிக்காட்டில் இந்திய முஸ்லீம் லீக் கட்சி சார்பாக முப்பெரும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவசங்கர், அவர்கள் கலந்துகொள்வதை கண்டித்து கருப்பு கொடி காட்டப்பபோவதாக உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்பேரில் மாலை 7.30 மணியளவில் லப்பைக்குடிக்காடு டு திருமாந்துறை செல்லும் சாலையில், லப்பைக்குடிக்காடு பேரூராட்சி சாலைக்கு கிழக்கு புறமாக நீர்வள ஆதார அமைப்பு, அதன் தலைவர் அலிராஜா,த/பெ. அப்துல்ரஹீம், லப்பைக்குடிக்காடு என்பவர் தலைமையில் மற்றும் 9 நபர்கள் கையில் கருப்பு கொடி ஏந்தியவாறு ரோட்டில் நின்றுகொண்டு பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தனர். அப்போது உதவி ஆய்வாளர் மற்றும் வருவாய்துறையினர் மற்றும் காவல் துறையினர் அவர்களிடம் லாவகமாக பேசி கலைந்து செல்லுமாறு கூறினார்கள். பின்னர் அவர்கள் கலைந்து சென்றுவிட்டார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :-

1) எதிரிகள் இடையூறு செய்ததாக பொதுமக்களோ அல்லது வாகன ஓட்டிகளோ யாரேனும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. சம்பவ தினத்தன்று லப்பைக்குடிக்காட்டில் போராட்டமோ, ஆர்ப்பாட்டமோ நடத்த வேண்டுமென்றால் முன் அனுமதி பெற

வேண்டுமென்று தமிழ்நாடு காவல் துறை சட்டம் 30–ன் கீழ் மாவட்ட நீதிபதியோ அல்லது காவல் துறை கண்காணிப்பாளரோ உத்தரவு ஏதும் பிறப்பித்திருந்தார்களா என்றால் இல்லை.

2) எதிரிகள் தங்களுடைய உரிமைக்காக ஜனநாயக உரிமைப்படி போராட்டம் செய்தார்கள் என்றாலும், நான் உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJ COURT, KUNNAM